11.11.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

SC No. 20/2019

அ.சா. 22

**பெயர். திரு.மைக்கேல் இருதயராஜ்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதன்மை சாட்சியத்தின் தொடர்ச்சி :-**

கடந்த 27/06/2018 ஆம் தேதி காலை 6 மணியளவில் எடப்பாளையம் மெயின் ரோட்டில் உள்ள டீக்கடையில், மோகன், திலீப் குமார், முஸ்தபா, ஆகியோர் நின்று டீ குடித்து பேசிக் கொண்டிருந்ததாகவும், இவர்கள் மூவர் மீதும் ஜாபர் கொலை வழக்கில் சந்தேகம் இருப்பதாக மேற்படி அலாவுதீன், பவர் ஜான், நூர் முகமது, ஆகியோரை விசாரிக்கும் போது, வாக்குமூலங்கள் கொடுத்துள்ளார்கள். அதன் அடிப்படையில் கடந்த 21/08/2018 ஆம் தேதி ஆய்வாளர்.ஜோகிந்தர் என்பவர், மேற்படி எதிரி மோகன் என்பவருக்கு, குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 41(1)a படி சம்மன் கொடுத்து, அவர் கடந்த 22/08/2018 ஆம் தேதியன்று காலை 8 மணிக்கு, காவல் நிலையம் ஆஜரானார். மோகன் என்பவரை ஆய்வாளர் விசாரித்து, அவர் தானாக குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரை 8.30 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து, சாட்சி தமிழரசன், கிராம நிர்வாக அலுவலர், மற்றும் சாட்சி தனபால், கிராம உதவியாளர், ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். அதில் சாட்சிகள், எதிரிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அது அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மோகன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், “தன்னை அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய கூர்மையான கத்தியையும், சாம்சங் செல்போன் ஒன்றையும், மற்றும் காரையும், எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். மேலும் இந்த வழக்கில் ஜாபரை கொலை செய்ய என்னுடன் உடந்தையாக இருந்த எதிரியான என் தம்பி ரவி மற்றும் என் கார் டிரைவர் செல்வம் மற்றும் திலீப் குமார் ஆகியோருடன் சேர்ந்து அப்துல் ஜபாரை கொலை செய்த விவரத்தைக் குறித்து கூறியுள்ளார். மேலும் அழைத்துச் சென்றால் அவர்களை அடையாளம் காட்டுவேன் என்று அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். மேலும் அன்றைய தினம் 10-45 மணிக்கு எடப்பாளையம் காலனியில் உள்ள எதிரி

மோகன் வீட்டின் அருகில் உள்ள மணல் குவியலில் மறைத்து வைத்திருந்த 1.ரத்தக்கறை படிந்த சுமார் 30 செ.மீ நீளமுள்ள மரத்தில் பிடியுடன் கூடிய கூர்மையான கத்தி ஒன்றையும், கத்தியின் மொத்த நீளம் சுமார் 30 செ.மீ, இரும்பு பகுதி சுமார் 19.5 செ.மீ, மரக்கை பிடி சுமார் 8 செ.மீ, இரும்பு பூண் 2.5 செ.மீ, மேலும் samsung galaxy A3 செல்போன் ஒன்று IMEI No.356319/08-181997-5 மேலும் 356320/08-181997-3 மற்றும் 11:15 மணிக்கு அதே எதிரி மோகன் வீட்டின் முன்பு, TN07BP3994 என்ற பதிவெண் கொண்ட இன்னோவா சில்வர் கலர் கார் ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்ததை, அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து, கையொப்பம் பெற்று, தயார் செய்துள்ளார். ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், கத்தி சா.பொ.1 ஆகவும், செல்போன் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் TN07BP3994 காரை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், காரின் புகைப்படங்கள்(எண்ணிக்கை 3) சா.பொ.3 ஆகவும், அந்தக் கார் தொடர்பான சிடி சா.பொ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மோகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், வழக்கின் எதிரியான ரவி மற்றும் செல்வம் ஆகியோர்களை டி.எடப்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில், கடந்த 22/08/2018 ம் தேதி 12.00 மணியளவில், இருவரையும் காரணம் கூறி கைது செய்தும், இதில் ரவி என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில், வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றுள்ளார். மேலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் "தன்னை அழைத்து சென்றால் தான் ஜப்பாரை கொலை செய்ய பயன்படுத்திய கத்தி-1 யும், மோட்டார் சைக்கிளையும், எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறியதன் பேரில், 13.45 மணிக்கு எடப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில், 1.இரத்தக்கறை படிந்த மரக்கைப்பிடியுடன் கூடிய கூர்மையான இரும்பு கத்தி - 1, கத்தியின் மொத்த நீளம் 27.5 செ.மீ, இரும்பு பகுதி நீளம் சுமார் 17 செ.மீ, மரக்கைப் பிடி நீளம் சுமார் 10.5 செ.மீ, இரும்பு பூண் சுமார் 1.5 செ.மீ, அளவு உள்ளதையும், TN32AL9063 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனம் ஆகியவைகளை அதே சாட்சிகள் முன்னிலையில், கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் சைக்கிள், கத்தி ஆகியவைகளை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், மோட்டார் சைக்கிளின் புகைப்படங்கள் எண்ணிக்கை -3 சா.பொ.5 ஆகவும், கத்தி சா.பொ.6 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(முதல் விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது).**